www.padippakam.com

# புதிய தடம்

போராடுபவர்கள் தோற்கடிக்கப்படலாம் போராடாதவர்கள் ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள்.

—பெர்டோல்டு பிரெக்ட்.

தடம் - 7 ஜூன் - 2000 நன்கொடை ரூ. 5-00



## மே தினம் உழைப்பாளர் போர் தினம்!

படிப்பகம்

www.padippakam.com

# ஆதி புத்தி



மதிய உணவுத்தட்டில்
தப்படித்து விளையாடியதற்கு
உள்ளங்கை உறிபட்டதைவிட
"புத்தி போவுதா"
வசவுகள் வலிக்கும்
இப்போதும் நினைக்க.

மாடுமேய்க்க ஆளின்றி
வயிற்றுப்பாட்டுக்கு
வகுப்பறை நிறையும் கோபம்
படிக்கத் திணறிய சாக்கிட்டு
வாத்தியின் வாயில் நாறும்
"சாணியள்ள தாண்டா நீங்க லாயக்கு."
வாத்தி மகனும்
தோளில் மாட்டிக் கொண்டு போனான்
"கம்ப்யூட்டர் ரிதம் பேடாம்"
கேட்டதற்கு சொன்னான்.

வாத்தியாரை நினைத்தேன்
நய்யாண்டியாய்
காதிற்குள் அதிரும்
என்னதும் வாத்தியானதும் ஆதிபுத்தி
ஜஞ்ஜனக்கு
ஜனக்கு ஜனக்கு.

தய். கந்தசாமி, திருத்துறைப்பூண்டி

படிப்பகம்

www.padippakam.com


# புதியதடம்

தடம் - 7
ஜூன் - 2000

ஆசிரியர்
**மேகவண்ணன்**

ஆசிரியர் குழு
வாசுஹரி
கருணாகரன்
ரமேஷ்
எஸ்.டி. ராஜா
சுபச்சித்திரன்



தொடர்புக்கு
44,
லெட்சுமண தீர்த்தம்தெரு,
ராமேஸ்வரம் - 623 526.
ராமநாதபுரம் மாவட்டம்,
தமிழ்நாடு, இந்தியா.

மின் அஞ்சல் முகவரி
Puthiyathadam @
yahoo. Com.

தொலைபேசி எண்கள்
04573 22482
22456


# ஒட்டகங்களும் வாசனைத் திரவியங்களும்

கிளிண்டன் இந்தியா வரப்போகிறார் என்றன இந்தியப் பத்திரிக்கைகள், எப்போது? எப்போது? என்று பலர் ஏங்கினர். தேவதூதனை வரவேற்க பெத்லேகம் நகர் காத்திருந்தது போல கிளிண்டனின் இந்திய வருகைக்கு அமெரிக்க விசுவாசிகள் வாய்பிளந்து காத்திருந்தார்கள். பாதுகாப்புத்துறையில் பல்வேறு உயர்தொழில் நுட்பங்களை எட்டியுள்ளதாக மார்தட்டிக் கொண்ட இந்திய ஆட்சியாளர்கள் முகத்தில் காறி உமிழ்ந்தபடி ஆயிரம் அமெரிக்க பாதுகாப்பு மற்றும் அந்தரங்க உதவியாளர்கள் புடை சூழ கிளிண்டன் வந்திறங்கினார்.

சாத்தான் வேதம் ஓதுவதுபோல இந்திய பாராளு மன்றத்தின் மைய மண்டபத்தில் நமது மக்கள் பிரதிநிதிகளுக்கு மத்தியில் உலக அமைதி குறித்து கிளிண்டன் உரையாற்றினார். எம்.பி. க்களின் வாய் வழியே கொசுக்கள் உள்ளே போய் (பயந்தபடி) திரும்பி வந்தன.

உரை முடிந்ததும் கிளிண்டன் ரசிகர் மன்றத்தின் உறுப்பினர்களான அனைத்து அரசியல்வாதிகளும் முண்டி யடித்துக் கொண்டு முன்னேறி அவருடன் கைகுலுக்க துடித்தார்கள். அதில் சிலருக்கு அதிர்ஷடமும் இருந்தது. பஞ்சு மிட்டாய் விற்பவரை பார்த்து காசு இல்லாத சின்னப் பிள்ளைகள் ஏங்குவதைப் போல அமெரிக்க மோகமும் ஏகாதிபத்திய வழிபாடும் கொண்ட பாராளுமன்ற வாதிகள் கிளிண்டனைத் தொட்டுவிட துடித்தார்கள்.

ராஜஸ்தான் வரும் கிளிண்டன் ஒட்டகச் சவாரி செய்ய ஆசைப்பட்டாலும் படலாம் என்ற ஐயத்தில் அங்குள்ள ஒட்டகங்கள் மீது செண்டு அடிக்கும் அளவிற்கு ஆட்சியாளர்களை அமெரிக்க விசுவாசம் ஆட்டிவைத்தது. உலகிலேயே செண்டு அடித்துக் கொள்கிற ஒட்டகங்களை கிளிண்டன் தன் வாழ்நாளில் வேறெங்கும் பார்த்திருக்க முடியாது. பார்லிமெண்டிலுள்ள ஒட்டகங்கள் செண்டு அடித்துக்கொண்டனவா என்பது பற்றி சரியான விபரங்கள் இல்லை. -ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com

# இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தினை மறு ஆய்வு செய்வது சரியா? தவறா?

- சுபச்சித்திரன்

அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட ஆண்டிலிருந்து ஒன்றரை ஆண்டு காலத்திலேயே அது திருத்தத்திற்குள்ளாகி உள்ளது. அதன் மூல விதிகள் 50 % மேல் திருத்தப்பட்டுள்ளன. மேலும் அது உருவாக்கப்பட்டு 50 ஆண்டுகள் சென்றுவிட்டதால் மறு ஆய்வு செய்வதில் தவறில்லை என்று பி.ஜே.பி. மற்றும் அதன் ஆதரவாளர்கள் சொல்கிறார்கள்.

இல்லை, அரசியல் மேதைகள் பலரால் தயாரிக்கப்பட்ட இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் புனிதமானது, அவை திருத்தங்களுக்கு அப்பாற்பட்டது, சுதந்திரப்போராட்டத்தில் பல உயிர்களைப் பலியிட்டு பலரின் தியாகங்களாலும் பெறப்பட்ட புனிதமான அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றுவதோ மறு ஆய்வு செய்வதோ தவறு எனவும் காங்கிரஸ் மற்றும் பிற பாராளுமன்ற கட்சிகளாலும் மக்கள் தொடர்புச் சாதனங்களாலும் பிரச்சாரம் செய்யப்படுகிறது.

இங்கே புனிதம் எனக் கற்பிக்கப்படும் அனைத்தும் ஆளும் ஆதிக்க வர்க்கத்திற்கு தேவையானவைகளாகவே இருக்கிறது. நம்மைப் பொறுத்தவரை மாற்றத்திற்கோ, ஆய்விற்கோ உள்ளாக்கக் கூடாதவை என்று எதுவும் இல்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் ஆதிக்கச் சாதி வெறியர்களிடமிருந்து விடுதலை பெற நடத்தும் போராட்டத்தை அங்கீகரிக்க மறுக்கும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை, இந்திய தீபகற்பத்தில் உள்ள பல்வேறு தேசிய இனங்களை ஒடுக்கி இந்திய தேசியம் என வேசம் கட்டும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்பதில் தவறு ஏதுமில்லை.

தற்போது பி.ஜெ.பி. அரசு மேற்கூறிய காரணங்களுக்காக அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்ற முயலவில்லை. மாறாக அந்த ராமபக்தர்களின் தொடர்ச்சியான நடவடிக்கைகளின்படி பார்க்கும் பொழுது இவர்கள் நோக்கம் புரியும்.

இந்த ராமபக்தர்களின் அடிப்படைக் கோட்பாடு இந்துத்துவம். இந்துத்துவம் என்பது வெறும் இந்துமதக் கடவுள்களை வழிபடுதல் மட்டுமல்ல. இதற்கு மேலும் அது பொருள் தரும். இந்துத்துவம் என்பது வாழ்க்கை முறை. மக்களை சாதியாகப் பிரித்து, படி நிலையில் ஆதிக்கத்தை உறுதியாக கடைபிடிக்கும் முறை. அதற்கென்று ஓர் உற்பத்திமுறை, பொருளாதாரக் கட்டமைப்பு, மையப்படுத்தப்பட்ட அதிகாரம், ஏற்றத்தாழ்வான சமூக உறவு என்று அமைந்துள்ள வாழ்க்கை முறை. இவற்றை உறுதியாக நடைமுறைப்படுத்த இந்துத்துவச் சக்திகள் ஆன்மீகம், கலாச்சாரம், ஆதிக்கச் சாதிச் சங்கங்கள் மூலமாக வலுப்பெற்று இன்று ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியுள்ளது. இதற்கு முன்பு ஆட்சி செய்த காங்கிரசு, ஜனதா மற்றும் அதன் பிரிவுகளில் உள்ள கட்சிகள் முற்றிலும் இந்த



படிப்பகம்

www.padippakam.com

இந்துத்துவத்திற்கு எதிரானவை இல்லை என்றாலும் அவை அரசு எந்திரத்தையும், பாராளுமன்றத்திற்கு ஏற்பவும் செயல்பட்டு வந்தன. ஆனால் ஊட்டி வளர்க்கப்பட்ட இந்துத்துவ வாழ்க்கை முறையை ஏற்றுக் கொண்ட மற்றும் அதற்கு பலியாகிப் போனவர்களை அடித்தளமாகக் கொண்ட இந்துத்துவ ஆதிக்கச் சக்திகள் அனைத்து அதிகாரங்களையும் தானே கைப்பற்றி அதிகாரம் செலுத்த முற்படுகிறது.

ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிய சக்திகள் சட்டரீதியாக தமது ஆதிக்கத்தை பிற மத, தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் ஜனநாயக சக்திகள் மீது நிறுவ முயல்கிறது. அசைவக் கடவுள்களை வணங்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், இந்து அல்லாத பிற மதத்தினர் மற்றும் இறைவழிபாட்டினை ஏற்றுக் கொள்ளாதவர் அனைவரும் கல்வி நிலையங்களில் சரஸ்வதி வணக்கம் பாட வேண்டும். (உத்திரப் பிரதேசத்தில்) இந்து அல்லாத மற்ற மதத்தினர் புதிய வழிபாட்டுத் தலங்கள் கட்டவோ அல்லது ஏற்கனவே உள்ளவற்றை பெரிது படுத்தவோ தடை செய்தும், பலமுறை தடை செய்யப்பட்ட இந்துத்துவ சக்திகளின் பயிற்சி பெற்ற வன்முறை கும்பலில் (ஆர்.எஸ்.எஸ்.-ல்) அரசு ஊழியர்கள் சேர அனுமதி வழங்கியும் உத்திரவிட்டுள்ளனர்.

இப்போது அரசியல் அமைப்புச் சட்டத்தை தங்களுக்குச் சாதகமாக மாற்றியமைக்க முற்படுகின்றனர். இந்துத்துவத்தின், ஆதிக்க மற்றும் ஆக்கிரமிப்பு தன்மையை – தேச நலன், பாதுகாப்பு என்ற பெயரில் (கார்கில்) இந்திய தீபகற்பத்தில் உள்ள அனைத்து தேசிய இனங்களையும் ஒடுக்கவும். ஏற்கனவே ஜனநாயகப் பூர்வமான, தேர்தல் என்ற பெயரில் இந்தியாவில் உள்ள வாக்காளர்கள் அனைவருக்கும் கைதிகள் போல் அடையாள அட்டையும், எண்ணும் வழங்கப்பட்டு வரும் நிலையில், குடிமக்களின் கட்டாய உரிமை மற்றும் கடமை என்ற பெயரிலும் வாக்களிக்க விரும்பாத – போலியான தேர்தலை ஏற்காத – ஜனநாயக சக்திகளையும் தண்டிக்கத் துடிக்கின்றனர்.

தாராளமயம், உலகமயமாக்கல் என்ற பெயரில், அரசு நிறுவனங்களை மூடியும் பன்னாட்டு தனியார் நிறுவனங்களுக்கு இங்கே வாய்ப்பளித்தும், இந்திய மக்களை ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனங்கள் கொள்ளையிட அனுமதித்தும் வருகின்றனர்.

அரசுத்துறைகள் மற்றும் நிறுவனங்களில் மட்டும் இடஒதுக்கீடு பெற்றுவந்த தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் பன்னாட்டு நிறுவனங்களின் வருகையினால் அவற்றில் இடஒதுக்கீடு இல்லாததால் வேலைவாய்ப்புகளை இழப்பதை எதிர்த்துப் போராடாமல் சட்டத்தின் மூலம் தடை செய்யவுமே பி.ஜே.பி.-யின் அரசியல் அமைப்புச் சட்ட மறுஆய்வு கொண்டுவரப்பட்டுள்ளது.

அம்பேத்கரால் தலைமை தாங்கப்பட்ட குழு உருவாக்கிய இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தினை இந்த ராமபக்த குரங்குகள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் ஜனநாயக சக்திகளுக்கு எதிராக மேலும் மேலும் கொடூரமானதாக மாற்றிவிட முற்படுவதால் இந்த அரசியல் அமைப்புச் சட்ட மறு ஆய்வு நடவடிக்கையை எதிர்ப்போம்.



படிப்பகம்

www.padippakam.com

# ஒன்றுபடு ஓரணியில் திரண்டுவிடு!

உலகச்சக்கரம்
உருண்டோடுது
ஆனால்
அடிமை வண்டிதான்
இதுவரை நகரவில்லை.
அடிமைச் சிறையிலே
ஆயுள் கைதிகளாய்
எத்தனை யுகம்தான்
வாழ்வது.
சுதந்திரக் காற்றை
சுவாசிக்க முடியாமல்
எத்தனை தடைகள்
எமைவந்து சேர்வது.
விண்ணிலேறி
விந்தை புரியும் காலத்தில்
மண்ணில்
மடியாமல்
மலரும் சாதிகள்.
இது
காலத்தால் அழியாத
ஏற்றத்தாழ்வென்று
தொற்றிக்கொண்ட
தொழுநோய்கள்.
தொழுநோய் போக்கவந்த
தொலைதூர பாதிரியை
தொலைத்தது மதவெறிதான்
அங்கு
தொலைந்தது மனித நேயம்.
புண்ணிய தேசமென்று
போற்றுகின்ற நாட்டில்தான்.



வீர. முருகேசன், பி.ஏ.



படிப்பகம்

www.padippakam.com

எண்ணிய எண்ணப்படி இடித்தனர்
மசூதியை.
புனித பூமியென்று
புகழுகின்ற நாட்டில்தானே
தனிக்குவளை கடையில் தந்து
தாழ்ந்தவனாய் இழிவுசெய்கிறார்.
வெண்மணி, கொடியங்குளம்
போடி, பீகார் முதல்
கொதிக்குது பார் இரத்தம்.
பிஞ்சு மனம் வெம்புதே நித்தம்
இங்கே கஞ்சுப் பானை
உருளுகின்ற சத்தம்
அரசு காதுகளை இருக்கிப் பொத்தும்
சமபந்தி போசனம்
சமத்துவபுர வேசங்கள்
தலித்துகளின் தலையைக் கிள்ளும்.
நாற்காலியைக் காப்பாற்ற
கொள்கையை விற்ற
கோமாளிகளால்
எத்தனை இன்னல்கள்
எம்மினம் அடைவது
தலித்துகளே கொடுமைகளுக்கு
முடிவு காணாவிடில்
அண்ணல் தந்த
இடஒதுக்கீட்டைக் கூட
காவிக்கூட்டங்கள்
பறித்துக் கொள்ளும்
ஒன்றுபடு!
ஓரணியில் திரண்டு விடு!!
சாதிக் கொடுமைக்கு
முடிவெழுது.



படிப்பகம்

www.padippakam.com

# திருவிளையாடல்

ஒருநாள் நடுநிசியில்
நடந்துகொண்டிருக்கும் போது
நாய்களின் குரைத்தலின் ஊடே
கேட்டது ஒரு குரல்
யார் என்றேன்?
கடவுள் என்றார்.
முத்திர வாடை வீசும்
முச்சந்தியில் இதென்ன கூத்து!
பதறிப்போனேன்.

இடுப்பிலொரு கோவணத்தோடு
ஏதேதோ அசைவுகள்.
கைதாங்கி மினிக்கிக்கொண்டிருக்கும்
தெருவிளக்கருகே கொண்டுவந்தேன்
ஆம்! கடவுள்தான்!
கருநீலத்திலிருந்தார்
ஒருவேளை சாக்கடை உடயமாய் இருக்கலாம்.
சந்தேகம் தீர்ந்தது
நிலா வெளிச்சத்தில்
நெற்றியில் தெரிந்தது மூன்றாம் கண்.
ஓ!
அதில் கண்ணீர்.
நடந்ததைக் கேட்டதும்
ஞான திருஷ்டியில் பதில் சொன்னார்.
பக்கத்தூரில் திருவிழா
மேலே பொறுப்புகளை
வாரிசுகளிடம்
கொடுத்துவிட்டு
நேரில் வந்தாராம்



படிப்பகம்

www.padippakam.com

பார்த்ததும் மக்களுக்கு பீதி
தலையிலிருந்த கங்கையை
யாரோ முதலாளி வீட்டுக்கு எடுத்துப் போனாராம்.
நெளிந்தபாம்பை வித்தை காட்ட
பிடித்துவிட்டார்களாம்.

மிச்சமிருந்த சூலமும்
இசுலாமிய ரத்தம் பார்த்து
சாராயக்கடையில் அடகு போனதாம்.



கோபத்தில் நெற்றிக் கண்ணை
திறப்பதற்கு முன்பே
காவலர்கள் லத்தியடி நடத்த
பிரம்படி கொடுத்த
பொற்கை பாண்டியர்களிடம்
இதுவும் எம் திருவிளையாடல் தாம்
என்று சொல்லப் பயந்து
ஓடிவந்ததில் தான் இப்படி ...
பார்க்க பாவமாய் இருந்தது
என் கையிலிருந்த
சில்லறைகளை கொடுத்து
பிட்டுக்கு மண் சுமந்தவரை
காசுக்கு மண் சுமக்கும்
லாரி ஒன்றில் ஏற்றியனுப்பினேன்!
புறப்பட்ட வேகம் பார்த்தால்
இந்நேரம் அவர்
கைலாயம் போய்ச் சேர்ந்திருப்பார்.

– தீபன், ஆற்காடு.



படிப்பகம்

www.padippakam.com



# புருஷார்த்தம் — மத்யமாவதி.

1.

கழுத்துக்கு கீழே
விலாவுக்கு மேல்
மார்புக் கூட்டுக்குள்
தசைகள் குறுகுறுத்து உருள்கிற அதிர்வு.
"என்ன" என்றேன் அம்மாவிடம்
"பருவம்" என்று வருந்தினாள்
"பருவமென்றால்"
அம்மாவின் வருத்தப்புதிரால்
மறுபடியும் கேட்டேன்
"ஆணுக்குச் சிறகுகளும்
பெண்ணுக்கு விலங்குகளும்
உருவாகும் காலம்"
அம்மாவின் சொற்கள்
அப்போது புரியவில்லை.



2.

தென்னங்கீற்றில்
பச்சை வாடைக்குள் இருக்கையில்
தேய்த்து மினுங்கும்
உலோகப் பூண் உலக்கையைக்
காவலுக்கு நியமித்தாள்
"எதற்கம்மா?" என்றேன்
நீ இருக்கும் வரைக்கும்
உலக்கைதான் கூட வரும்
அம்மாவின் சொற்கள்
அப்போது புரியவில்லை.





படிப்பகம்

www.padippakam.com

3.

தாம்பத்தியத்தில் மனம் வெந்து
பிள்ளைகள் தின்றஉடல் மிஞ்சி
இன்று
காலம் குதப்பிய சக்கை நான்
"உலக்கைதான் கூட வரும்" என்ற
அம்மாவின் சொற்கள்
இப்போது புரிகிறது
பூண் மினுக்கும் உலக்கையும்
நான் வளர
வளர்ந்தது என்னுடன்
என்னைவிட இன்று
பெரும் வளர்ச்சி அதற்கு
ஆனால்,
ஒவ்வொரு பருவத்தில்
ஒவ்வொரு பெயர் அதற்கு
அன்று கணவன்
இன்று மகன்
நேற்று சமைந்த
மகளிடம் சொன்னேன்
"நீ இருக்கும் வரைக்கும்
உலக்கைதான் கூடவரும்"
ஏனம்மா என்றாள்
இப்போது புரியாது
அம்மாவின் சொற்கள்.



(பெண்ணியம் – அணுகுமுறைகள் –
டாக்டர் இரா. பிரேமா எழுதிய நூலிலிருந்து)



படிப்பகம்

www.padippakam.com

# நாளொன்றுக்கு மூன்று மணி நேரம்!

மதியச் சாப்பாட்டிற்கு மேல்
ஒரு மூன்று மணி நேரம்
பொதுவாக எல்லோரும்
ஒரு தூக்கம் போடும் நேரம்
நாம் இங்கு உருப்படாத ஓர்
தொழிலாளியைப்பற்றிப் பேசவில்லை
நாம் பேசுவது தேர்ந்த அறிவாளியைப் பற்றி

அவர் நினைத்தால்
அந்த மூன்று மணி நேரத்தில்
தன் தொழிலில் மேலும் சிலரை
ஏமாற்றுவது பற்றி சிந்திக்கலாம்
அல்லது தான் வாங்கவிருக்கும்
இரு சக்கர வாகனம் எந்த மாடலில்
இருக்கலாம் என்பது பற்றிச் சிந்திக்கலாம்.

கடந்த காலத்தில்
எதிராளிகள் மிரள தான் புரிந்த
வாதப் பிரதிவாதங்களைப் பற்றி
வாகாகப் படுத்துக் கொண்டு
அசை போடலாம்.

அட எதுவுமே இல்லாவிட்டால்
ஏதேனும் பாலுறவுக் கற்பனைகளில்
திளைத்துக் கிடக்கலாம்.
ஆனால் இந்தப் பாழாய்ப் போன
போராளிகளை நினைத்து விட்டால்
அவரால் தூங்கத்தான் முடியுமா?



படிப்பகம்

www.padippakam.com

அந்த அழிவான்கள்
இவர்பேச்சை கேட்டால்தானே!
இவரும் விடுவதாயில்லை
காதுகள் இரண்டு கிடைத்துவிட்டால் !
காகிதமும் பேனாவும் கிடைத்து விட்டால்!
கிழிகிழி என்று கிழித்துவிடுகிறார்.
என்னசெய்தென்ன
இவர் தலைக்குப் பின் ஒளிரும் வட்டம்
அந்த குருட்டு கண்களுக்கு
தெரிந்தால்தானே?
அவர்கள் விழிகளுக்கு
மக்களும், எதிரிகளும் மட்டுமே தெரிகிறார்கள்.

இவர் சாபமிடுகிறார்
"நீங்கள் அழியப்போகிறீர்கள்
எதிரி உலக மயமானவன்"
என்று ஏதேதோ பிதற்றுகிறார்.

இவர் போன்ற
அவதார புருசர்களை
உதிர்ந்த மயிராக நினைத்து
அவர்கள்
தங்கள் பயணத்தை தொடர்கிறார்கள்.
அது சரிதானே!
நாய் குரைத்தா
சூரியப் பயணம் தடைபடும்?



— இம்மானுவேல்.



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு கலந்துரையாடல்

மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்புவரை இனி தாய்மொழியில்தான் அனைத்து பாடங்களையும் கற்பிக்க வேண்டும். என தமிழக அரசு ஆணை பிறப்பித்ததைத் தொடர்ந்து தனியார் பள்ளி நிர்வாகிகள் உயர் நீதி மன்றத்திற்குச் சென்று அரசாணையை தடை செய்யக்கோரி வெற்றியும் பெற்றது நாம் அனைவரும் அறிந்ததே.

நன்கு கவனிக்கவும் அரசாணை தமிழில் மட்டுமே பயிற்றுவிக்க வேண்டும் எனச் சொல்லவில்லை. அவரவர் தாய் மொழியில் தான் பயிற்றுவிக்க வேண்டும் என்றது. கர்நாடகத்தில் கன்னடம் பயிற்று மொழியாகவும். மேற்கு வங்கத்தில் வங்காளி பயிற்று மொழியாகவும் இருப்பது இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். ஆனால் இவ்வளவு இளகிய அரசாணையை எதிர்த்து தடை உத்திரவு வாங்கியதுடன் நீதி மன்றத்தின் வாயிலிலேயே ஆரவாரம் செய்தமை புகைப்படத்துடன் தினசரிகளில் செய்தியாக வந்துள்ளது.

தமிழ் நாட்டிலேயே தமிழுக்கு நேர்ந்த இந்த அவலத்தைப் போக்க எந்த பெரிய அரசியல் கட்சியும் வாய்திறக்காத நிலையில் உள்ளூர் அளவில் மக்கள் கருத்தறியும் முயற்சியாகவும் கருத்துப் பகிர்வுக்கான ஓர் கலந்துரையாடலுக்கு புதியதடம் அழைப்பு விடுத்து.

21-4-2000 அன்று முடிவு செய்து அழைப்பிதழ் தயாரித்து 22-4-2000ல் விநியோகித்து 23-ந் தேதி காலை 10-00 மணிக்கு கலந்துரையாடலை நிகழ்த்தியது. மிகவிரிவாக பரந்த அளவில் மேற்கொள்ள வேண்டிய ஒரு நிகழ்வை கால மற்றும் பிற வாய்ப்புகளைக் கொண்டு மிகச் சிறிய கலந்துரையாடலை நிகழ்த்த முடிந்தது. நேரம் காலை 10-00 ல் இருந்து 12-00 மணி வரை என்று குறிப்பிட்டிருந்த போதிலும் 10-30 மணிக்கு துவங்கிய கலந்துரையாடல் தோழர்களின் ஆர்வத்தால் பிற்பகல் 2-30 மணி வரை நீண்டது. 17 அழைப்புகள் கொடுக்கப்பட்டு 16 தோழர்கள் வந்து கலந்து கொண்டு கருத்துரைத்தனர்.

காஞ்சிபுரத்தை சேர்ந்த தோழர் வேணுகோபால் அவர்கள் அன்று காலை தன் குடும்ப நிகழ்ச்சி ஒன்றிற்காக இராமேஸ்வரம் வந்தார். நம் வாய் மொழி அழைப்பை ஏற்று வந்து கலந்து கொண்டதுடன் அதிக அளவில் கருத்துரைத்து உற்சாகமூட்டினார். அவருக்கு புதியதடம் குறிப்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

உரையாடலில் பங்கேற்றவர்களுள் திரு. வேணுகோபால் (த.மு.எ.ச., காஞ்சிபுரம்) திரு. வாசுஹரீந்திரன் (புதியதடம்) திரு. எஸ்.இ. முருகானந்தம் (சி.பி.ஐ) திரு. கோடூர் விஜயக்குமார் (இலக்கிய ஆர்வலர்), திரு. ரெத்தின குமரன் (சமூக விஞ்ஞானப் பயிலகம்), திரு. நல்லதம்பி (புதியதடம்), திரு. சங்கர் (புதியதடம்), திரு. மீராஷா (சங்கமம்), திரு. மேகவண்ணன் (ஆசிரியர், புதியதடம்), திரு. முஸ்தபா (பிரகடனம்), திரு. ஹமீது (இலக்கிய ஆர்வலர்), திரு. கருணாகரன் (புதியதடம்), திரு. வரதன் (மீனவர்), திரு. இரா. மோகன் (பிரகடனம்) திரு. எஸ்.டி. ராஜா (புதியதடம்), திரு. குமரன்தாசு (ஆசிரியர், உரிமைப் போராட்டம்).

புதியதடம் அழைப்பை ஏற்று கலந்துரையாடலில் பங்கேற்று கருத்துரைத்த நண்பர்கள் அனைவருக்கும் புதியதடம் தன் தோழமை நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

உரையாடலை தோழர் வாசுஹரீந்திரன் துவக்கி வைத்து பேசினார். தோழர்கள் அனைவரும் மிகவும் தோழமையுடன் பல்வேறு கருத்துக்களையும், விபரங்களையும் எடுத்து வைத்தார்கள். எல்லாருக்குமே (தோழர் வேணுகோபால் தவிர) முதல் கலந்துரையாடல் என்றாலும் தயக்கமின்றி உரையாடும் அளவிற்கு சூழல் சனநாயகப் பூர்வமாக அமைந்திருந்தது.

உரையாடலில் ஆங்கிலத்தினுடைய பயன்பாடு நம் அன்றாட வாழ்வில் அதிகப்படியாக இருப்பதற்கு காரணம் என்ன என்ற கேள்வி எழுப்பப்பட்டு விவாதிக்கப்பட்டது. மேலும் ஹிந்தி போன்று ஆங்கில எதிர்ப்பு அதிகம் பெறாமைக்கான காரணம் என்ன என்பது விவாதிக்கப் பட்டது. இன்று பெற்றோர் விருப்பம், உரிமை என்பதை காரணமாகக்காட்டி தமிழைப் புறந்தள்ளி இருப்பதைப் பற்றி குறிப்பிட்ட உரையாடல் மக்கள் விருப்பம் என்ற சொல்லாடலில் மறைந்திருக்கும் ஆளும் வர்க்கச் சதியையும் சுட்டிக் காட்டியது. ஒரு கற்பிதத்தை உருவாக்கி, பரப்பி அது செல்வாக்கு பெற்றவுடன் அதனைக் காரணமாகக் காட்டியே தங்களது சுரண்டலை, ஆதிக்கத்தை, அயோக்கியத்தனத்தை நிறைவேற்றிக்கொள்ளும் அதிகார வர்க்கத்தினரின் மோசடித்தனம் அம்பலப்படுத்தப்பட்டது.

கடந்த 50 ஆண்டுகால ஆங்கிலத் திணிப்பின் செல்வாக்கிற்குள் மக்கள் இருக்கும் போது தமிழ் பயிற்று மொழி என்பது தமிழரது உரிமை என்பதாக மட்டும் அதாவது அரசியல் கட்சிகளின் கவர்ச்சிவாத முழக்கமாக மட்டும் மாறி மக்கள் மத்தியில் பெரிய அளவில் எழுச்சியை தோற்றுவிக்காததைக்



படிப்பகம்

www.padippakam.com

கவனத்தில் கொண்டு மக்களிடம் உடனடியாக தீவிரப் பிரச்சாரத்தைக் கொண்டு சென்று விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது.

அதனை மேற்கொள்வதற்காக மக்கள் விழிப்புணர்வு இயக்கம் என்ற ஓர் அமைப்பு அனைவரின் கூட்டு முடிவாக தோற்றுவிக்கப்பட்டது. மக்கள் விழிப்புணர்வு இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர்களாக தோழர்கள் எஸ்.இ. முருகானந்தம், கோடூர் விஜயக்குமார், மீராஷா, முஸ்தபா, ஹமீது, கருணாகரன் மற்றும் எஸ்.டி. ராஜா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

மக்கள் விழிப்புணர்வு இயக்கத்தின் சார்பாக துண்டறிக்கை அச்சிட்டு விநியோகிப்பது என்றும் பல்வேறு வடிவங்களில் மக்களிடம் பிரச்சாரத்தை கொண்டு செல்வது எனவும் முடிவு செய்யப்பட்டது. இனிவரும் காலங்களில் மக்கள் விழிப்புணர்வு இயக்கம் மக்களை பாதிக்கும் பல்வேறு நிகழ்வுகள் தொடர்பாகவும் கூடி விவாதித்து ஆக்கப்பூர்வமாக செயல்படும் என உறுதி ஏற்றது.

புதியதடம் கலந்துரையாடலுக்காக அழைத்திருந்த நிலையில் வந்திருந்த தோழர்கள் கலந்துரையாடலுடன் நிற்காமல் செயலூக்கத்துடன் மக்களிடம் செல்ல மக்கள் விழிப்புணர்வு இயக்கத்தை தோற்றுவித்தார்கள். இந்த நல்ல துவக்கத்தை நாமும் வறவேற்போம்.

-குமரன்தாஸ்.

## மே - 5



பேராசான் காரல் மார்க்ஸ்
பிறந்தநாள்

அச்சுக்கு உதவியவர் இராம. கார்த்திக், அச்சிரம்பட்டு.



படிப்பகம்

www.padippakam.com

# வந்தவை (வெளியீடுகள்)

கரிக்கோட்டு வானவில் – கவிதைகள் – நவஜீவன்.
கவின் நூல் பயணம், 36, தோப்புத்தெரு, அம்மைப்பட்டு,
வந்தவாசி – 604 408. தொலைபேசி 04183–26543.
விலை ரூ. 15.00, பக்கங்கள்–64.

கவர்னர் பெத்தா – சிறுகதைகள் – மீரான்மைதீன்.
அன்பகம் பில்டிங், பெருவிளை, நாகர்கோவில்–629 003.

சாமக்கூத்து – கவிதைகள் – சுகன்.
அம்மா வீடு, சி–46, இரண்டாம் தெரு, நகராட்சிக் குடியிருப்பு,
தஞ்சாவூர் – 613 007.

பாலை – அடோனியல் கவிதைகள் – தமிழாக்கம் சி. சிவசேகரம்
தேசிய கலை இலக்கியப் பேரவை வெயியீடு
சவுத் ஏசியன் புக்ஸ் வசந்தம் (பிரைவேட்) லிமிடெட்,
44, 3–வது மாடி, கொழும்பு மத்திய கூட்டுறவு சந்தைத் தொகுதி,
கொழும்பு – 11. தொலைபேசி – 335844. ஃபேக்ஸ்–333279.
விலை குறிப்பிடப்பட வில்லை, பக்கங்கள்–63.

குழந்தைகளிடம் பொய்களைக் கூறாதீர்கள்
கவிதைகள் – செழியன்
காலம் வெளியீடு, P.O. Box No. 7305. 509 St.,
Clair Avenue West, Toronto, Ontario. M6C.1CO. CANADA.
விலை குறிப்பிடப்பட வில்லை, பக்கங்கள்–20

பன்னிரு கவிதைகள் – பூசிமா (இரா. சீனிவாசன்)
நளிநயம் – சி. 7, வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு
நயினாங்குளம் அஞ்சல், பட்டுக்கோட்டை – 614 602.
விலை ரூ. 5.00, பக்கங்கள்–14.



படிப்பகம்

www.padippakam.com

புது உலகம் எமை நோக்கி – புகலிடப் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் – தொகுப்பு

தேசியவாதமும் தமிழர் விடுதலையும் – சி. சிவசேகரம்,
புதியபூமி வெளியீட்டகம்.
47, 3–வது மாடி, கொழும்பு மத்திய கூட்டுறவு சந்தைத் தொகுதி,
கொழும்பு – 11.
விலை ரூ. 30.00, பக்கங்கள்–60.

தோற்றுத்தான் போவோமா – சபாலிங்கம்
நண்பர்கள் வட்டம் வெளியீடு, தொகுப்பாளர் சி. புஷ்பராஜா
216–10 ஆர்.கே.மடம் சாலை, (மாடி)
ஆர். கே. மடம் எதிரில், மைலாப்பூர், சென்னை–4.
விலை குறிப்பிடப்படவில்லை, பக்கங்கள்–124.

நிஷ்டை – சிறுகதைத் தொகுதி க. கலாமோகன்,
எக்ஸில் வெளியீடு,
கிடைக்குமிடம். லெனா. குமார் யாதுமாசி,
6. பருவதசிங்கராஜ் தெரு,
திருநெல்வேலி டவுன் – 627 006.

இதயத்தில் இன்னும் – பாலபாரதி – ஹைக்கூ கவிதைகள்,
கயல் வெளியீடு, 2–151, டி. பொள்ளாச்சி சாலை,
கிணத்துக்கடவு – 642 109. கோவை மாவட்டம்.
விலை ரூ. 15.00, பக்கங்கள்–80.

வடலி – சி. சிவசேகரம், கவிதைகள்,
சவுத் ஏசியன் புக்ஸ் வசந்தம் (பிரைவேட்) லிமிடெட்,
44, 3–வது மாடி, கொழும்பு மத்திய கூட்டுறவு சந்தைத் தொகுதி,
கொழும்பு – 11. தொலைபேசி – 335844. ஃபேக்ஸ்–333279.
விலை ரூ. 60.00, பக்கங்கள்–80.

ஜன்னலைத் திறவுங்கள் – விவாதம் அசோக்
YOGAN KANNAMUTHU, 45, RVE DAVY, 75017,
PARIS, FRANCE.
விலை குறிப்பிடப்படவில்லை, பக்கங்கள்–124.



படிப்பகம்

www.padippakam.com

# இதழ் அறிமுகம்

இலங்கை வாழைச்சேனை, நண்பர் இலக்கியக்குழு "யாத்ரா" என்றொரு கவிதைக்கான இதழை வெளியிடுகிறது.

நல்ல கவிதைகளும், கவிதைகள், கவிஞர்கள் பற்றிய செய்திகளையும் தாங்கி வெளிவரும் யாத்ராவின் முதலாவது இதழ் ஜனவரி 2000–ல் வந்துள்ளது. கவிதைகளோடு தொடர்ந்து வெளிவரும். நல்ல கட்டமைப்பு.

விலை: இலங்கை ரூபாய் 20.00

YATRA, 37,Dhankanatta Road
Mabola,Wattala-11300,Sri Lanka.

- வாசகர்களின் கருத்துக்கள், படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.
- நூல் விமர்சனம் பகுதிக்கு 1 பிரதி அனுப்ப வேண்டும்.
- ரூ. 50.00 நன்கொடை செலுத்துபவர்களுக்கு இதழ் தொடர்ந்து கிடைக்கும்.
- நன்கொடைகளை என்ற பெயரில் இதழ் முகவரிக்கு பணவிடையோ, கேட்பு வரைவோலையாகவோ அனுப்பலாம்.
- இதழ் பெறுபவர்கள் தங்கள் முகவரி மாறியிருப்பின் உடனடியாகத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

## புதியதடம் கிடைக்குமிடங்கள்

**சென்னை** கீழைக்காற்று வெளியீட்டகம்
10,ஔளியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை, சென்னை–2.

**மதுரை** எழுத்து
மயூரா வணிக வளாகம்,
48, தாகப்ப முதலித் தெரு, மதுரை.
தொலைபேசி– 749134.





படிப்பகம்

www.padippakam.com

# வரபெற்றோம்

## சிறு இதழ்கள்

- ஒளிநெறி. தி.நா. அறிவரசு, 64, கல்லூரிச் சாலை, திருப்பூர் – 641 602.

- குயில் தோப்பு. Sangoli Balakrishnan. SARATHI STORES 467/B, MANEKLAL MANSION KINGCICLE MUMBAI - 19.

- பயணம் – க. அளம்பளம் அஞ்சல் – 606 202. விழுப்புரம் மாவட்டம்.

- கலைச்சோலை பாரதி மோகன், I-B-S., வ.உ.சி. காலனி, கணேஷ் நகர், தூத்துக்குடி – 628 008.

- கலை – மாத இதழ் – தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், அம்பத்தூர் தெற்கு கிளை, 26, பாரதி தெரு, செல்லியம்மன் நகர், அம்பத்தூர், சென்னை–58.

- மதுமலர், இருமாத இதழ் வலம்புரிலேனா, மெயின்ரோடு, திருவாலம் பொழில், தஞ்சை – 613 103.

- ஒடுக்கப்பட்டோர் குரல் – சங்கமித்ரா, இதழ் எண் 2. பெரியார் தமிழ்ப்பேரவை, 1/429, தென் பெரும் நெடுஞ்சாலை, வண்டலூர் வாயில், சென்னை–48.


படியுங்கள்

உரிமைப் போராட்டம்

தமிழக மனித உரிமைக் கழகத்தின்
கருத்தாயுதம்

முகவரி

குமரன்தாசு
எண். 14, காளீஸ்வரி இல்லம், இராமகிருஷ்ணா தெரு,
புதுச்சந்தை (வடக்கு), காரைக்குடி – 630 001.




படிப்பகம்

www.padippakam.com

# கடிதங்கள்

தங்களின் 5–வது இதழ் காண நேர்ந்தது. உள்ளடக்கத்தில் மிகவும் சிந்தனைக்குரிய விஷயங்கள் கொண்டிருந்தது மகிழ்ச்சியாக இருந்தது. நாடே காவி மயமாகிக்கொண்டிருக்கும் சூழலில் இதுபோன்ற இதழ்களின் அவசியம் உணர வேண்டிய ஒன்று. இதழின் வடிவம் குறித்து ஆதங்கம். இதுபோன்ற வடிவமைப்பில் தான் "கோடு" என்றொரு இதழும் வந்துகொண்டிருந்தது. புதிய தொழில் நுட்பங்கள் சாத்தியப்படுத்தியிருப்பதில் சிற்றிதழ்களும் பயன்களை எடுத்துக்கொண்டே இருக்கின்றன. இவ்வகையில் மீட்சி இதழை மறக்க முடியாது. தாங்கள் இதழின் வடிவத்தை நேர்த்தியாக்குவதில் சற்று கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். வேறுஒரு சந்தர்ப்பத்தில் இன்னும் விரிவாக தொடர்பு கொள்வேன். இனியன புதியதடம் முயற்சி நிகழ்வுகளில் என் முகவரி குறிக்கப்படும் என்று நம்புகிறேன்.

ஆத்மாநாம், சென்னை–67.

புதியதடம் 6–வது இதழ் கிடைத்தது ஜனநாயகம் பற்றிய கவிதை சிறப்பாக உள்ளதெனினும் வடிவம் பற்றிய புரிதலும் கவிதைக்கு தேவையென்பதை நாம் உணரவேண்டியுள்ளது தோழர்.

காதல் என்பது கற்பிதமே என்கிற பாட்டாளியின் கூற்று சில வரையறைகளால் தீர்மானித்திருக்க வேண்டும். கற்பிதமாகவே நம் சமூகத்தில் ஊட்டப்படுகிறவை நிறையச் சொல்லப் போனால் கற்பிதங்களே உண்மை என்று புரிந்துகொள்ளப்பட்டும் உள்ளன. ஆனால், காதல் என்கிற உணர்வு கற்பிதமானதல்ல, இயல்பானது.

இதையும் அவரே வாதிடுகிறார். முடிவில் இதைத் தொகுத்திருந்தால் கட்டுரை முழுமை பெற்றிருக்கும். நசீம், சுபச்சித்திரன் கட்டுரைகளும் சிறப்பாக உள்ளன. முற்போக்குகளைத் தொடர்ந்து விமர்ச்சிக்கிற நீங்கள் இது பற்றி இன்றைய முற்போக்குகளின் படைப்புகளோடு ஆய்வு செய்பலாம். அல்லது அதற்கு மாற்றான மார்க்சிய கலை இலக்கிய கோட்பாடுகளை முன்வைக்கலாமே?

– தீபன், ஆற்காடு.

மார்க்சிய வாசிப்பின் தாக்கம், சதவீதம் கூடுதலாக இருக்கிறது. (இது எதிர்மறை விமர்சனம் அல்ல) இன்னும் தலித்திய – பெண்ணியப் பார்வைகளையும் பதிவு செய்ய வேண்டியது அவசியம். பிறகு இளைஞர்த் தனம் மிகையாய் இருக்கிறது. கடந்தகால வாசிப்பின் விளைவாக ஒரு ஆதிக்கசாதி, ஆண் தன்நிலைப்பார்வை நம்மையறியாது நம்மிடம் இருப்பதை மெல்ல மெல்லத்தான் சரி செய்ய வேண்டும். இதழில் இன்னும் கூடுதலாக இலக்கியத்தனம் சேர்க்கலாம். 5, 6 இதழ்களின் தலையங்கங்கள் புதிய பரிமாணங்களை அறிமுகம் செய்தது. தலித் மற்றும் பெண்களின் பார்வையில் அமைந்த கவிதைகளில் பிரச்சார நெடி தவிர்க்கவியலாதது. எனினும், பிரச்சாரத்தை அங்கதம், அழகியல் போன்ற இலக்கிய கூறுகளுக்கு பதிலீடு செய்யலாம்.

தோழமையுடன் தப். கந்தசாமி, திருத்துறைப்பூண்டி.



படிப்பகம்

www.padippakam.com

# கடிதங்கள்

புதியதடம் கிடைத்தது. திரைப்படத்தைப் பற்றி விமர்சனம் அவசியம் தேவை. ஏனெனில் நல்ல படங்கள் பல மக்களிடையே சென்றடையாமல் மறைந்து விடுகிறது. கண்டிப்பாக அது போன்ற படங்களை விமர்சனம் மூலம் மக்களிடையே சென்று சேர்ப்பது அவசியம். ஜனநாயக கவிதையும், மேலும் இடம் பெற்ற அனைத்துக் கவிதைகளும் சிறப்பாக இருந்தன. புதுயுகம் செ. கோவிந்தராஜன், திருச்சி–21.

புதியதடம் ஆசிரியருக்கு....

வணக்கம். தங்கள் புத்தகம் பட்டுக்கோட்டையில் அம்பேத்கர் மையம் சாா்பில் நடந்த விழாவிற்கு வந்தபோது கிடைக்கப்பெற்றேன். அதில் தூவிக்கிடக்கின்ற அத்துனை வாா்த்தைகளும் வாசித்தேன். கவிதைகளை நேசித்தேன். புதியதடம் மக்களுக்கு புதிய பாதையைக் காட்டிக்கொண்டு இருக்கிறது. அது மேலும் வளா்ந்து உழைக்கும் மக்களுக்கு சமுதாயப்பணி புரிபவா்களுக்கு மருந்தாகவும், புரட்சிகர சனநாயகத்தை உருவாக்கும் விதத்திலும் இரத்தினச் சுருக்கமாய் அமைந்துள்ளது. மேலும் கவிதைகள் அனைத்தும் கொடுமையைக் கண்டு கொதித்தெழுந்ததாகவும் இருந்தது. மிக்க நன்றி. இதழ் மேலும் வளா்ந்து சமூகம் புதியதடத்தை அடைய இது உதவுமென நம்புகிறேன்.

வீர. முருகேசன், பட்டுக்கோட்டை.

அன்பான தோழமைக்கு ....

பாட்டாளியின் வணக்கங்கள். தாங்கள் அனுப்பிய புதியதடம் – 6. பெற்றேன். இனிது மகிழ்ந்தேன் எமது சூழ்நிலைகளின் காரணமாக புதியதடத்திற்கு தொடா்ந்து தொடா்பு கொள்ள முடியாமலே இருந்து வருகிறது. குறைந்த பட்சம் இதைத் தவிா்க்கலாம் என்ற உந்துதலால் இதை எழுதிக்கொண்டிருக்கிறேன்.

இதழ் அனுப்பினோமே! என்னவாயிற்றோ! எனும் நிலையாவது குறைந்த பட்சம் தவிா்க்கலாமே! –அது கொண்டு தான் இந்த அஞ்சல். மீண்டும் வாய்ப்புக் கிடைக்கும் போது விரிவாக எழுதுகிறேன். தோழா் அருள் கூா்ந்து பொறுத்துக் கொள்ளுங்கள் அதுவரை. இயலவில்லையெனினும் இந்தத் தொடா்பு சற்றே ஆசுவாசப் படுத்தட்டும் உங்களை. இதழும், இதழில் உள்ள கட்டுரைகள் ஆழமாய், கூா்மையும், வீரமும் உடையதாய் ... சான்று சங்கமித்திரா போன்றவா்களிடமிருந்து அழைப்பு நமது அலைவரிசையில் இல்லாவிட்டாலுங் கூட. ஆற்றலுடன் செயல் படுங்கள் தோழா். தோழமைக்கரங்களோடு சகப்பயணியாய் நானும்.

– பாட்டாளி – திருச்சி.



படிப்பகம்

www.padippakam.com

# சேது

**திரை விமர்சனம்**

- நிகழ்வன்

சமீபத்தில் திரைக்கு வந்து இளைஞர்களால் பெரிதும் பேசப்பட்ட படம் சேது. ரெளடித்தனமான குணாம்சம் கொண்ட கதாநாயகன் தன்னுடன் கல்லூரியில் படிக்கும் ஒரு பார்ப்பனப் பெண்ணைக் காதலிப்பதே கதை.

உலக விஷயங்கள் எதுவுமே தெரியாமல் அப்பாவிப் பெண்ணாக கல்லூரியில் நுழையும் கதாநாயகி அபித குஜலாம்பால் போன்ற பார்ப்பனப்பெண்ணை திரையில் மட்டுமே கான முடியும். முரட்டுத்தனமான கதாநாய்கன் சீயான் தான் காதலிக்கும் பெண்ணின் அபிப்பிராயத்தை கேட்க மறுத்து நான் உன்னைக் காதலிக்கிறேன். ஆகவே நீயும் என்னை காதலித்தே தீர வேண்டும் என்கிற ஆணாதிக்க அராஜகத்துடன் நடந்துகொள்வதும் கதையோட்டமாக உள்ளது. இப்படி ஏறுக்கு மாறான காட்சிகளை படமாக்கியும் அதை நியாயப்படுத்தியும் எல்லோரும் ரசிக்கும்படியாக படமாக்குவதில் இயக்குநர் பாலா கை தேர்ந்திருக்கிறார்.

பிற்பட்ட சாதியை சேர்ந்த நாயகன் சீயான் பார்ப்பன பெண்ணை காதலித்து மனஞ்செய்து கொள்வது தர்மமாகாது. அவளுக்கு என்றிருக்கும் அதே சாதியைச் சேர்ந்த அம்பியை திருமணம் செய்து கொள்வதே சத்தியம், சம்பிரதாயம், தர்மம் என்பதாகச் சொல்லப்படுகிறது. இதற்காக யார் காலிலும் விழலாம் என்பதைக் காட்சியாக அமைத்து சாதியக் கட்டுமானம் எந்தவிதத்திலும் தகர்ந்து விடாமல் காக்க வழிச் சொல்லப்படுகிறது. சமூக ஒடுக்குதல்களுக்கு வழிவகுக்கும் சாதியத்தை கட்டிக் காக்கும் பார்ப்பனர்களை



## ஏப்பிரல் 14

அறிஞர். அம்பேத்கர் பிறந்த நாள்



படிப்பகம்

www.padippakam.com

ஒன்றுமே அறியாத பாவப்பட்ட ஜென்மங்களாகக் காட்டி அதன் வில்லத்தனத்தை மூடி மறைத்திருக்கிறார் இயக்குநர். பார்ப்பன குடியிருப்பான அக்ராகாரத்தில் விபச்சார விடுதியா.? என்பதில் துடியாய் துடித்து பார்ப்பனரைப் பேணிப் பணி செய்க என்கிற மனுதர்மப்படி பார்ப்பனர்கள் மற்ற சாதிகளால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்பதை ஊர்ஜிதப்படுத்த நாயகனின் தடாலடி நடவடிக்கையால் அவனைப் பயித்தியமாக்கி தனது இந்துத்துவா விசுவாசத்தை பாலா காட்டியுள்ளார்.

மேலும் இராமநாதபுரத்தில் கதை நடப்பதாக காட்டப்படுகிறது. இம்மாவட்டத்தில் மிகப் பெரிய மனநலக்காப்பகங்கள் ஏர்வாடி தர்காவில் தான் உள்ளது. இவை முஸ்லீம் மத நிறுவனங்களாக உள்ளதை மறைத்து கற்பனையாய் பாண்டி மடம் என்றதொரு இடத்தை உண்டாக்கி அதில் இந்து முறைப்படி மருத்துவம் செய்வதாய் காட்டி மோசடி செய்திருக்கிறார் இயக்குநர். மனுதர்மப்படி ஒரு பார்ப்பான் எந்த சாதிப் பெண்ணை வேண்டுமானலும் மணந்துகொள்ளலாம் ஆனால் பிற்பட்ட தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த யாரும் பார்ப்பனப் பெண்ணை மணம் செய்து கொள்வது தர்மமாகாது. இதனடிப்படையிலேயே இறுதிக் காட்சியில் நாயகியைக் கொன்றாவது இந்து தர்மத்தை நிலை நாட்ட இயக்குநர் துணிந்திருக்கிறார்.

சமூக அடிமைத்தனங்களைஅங்கீகரித்து பிரச்சாரம் செய்யும் படங்களில் இதுவும் ஒன்று இயக்குநரின் படமாக்கும் திறமை, நடிப்பு, இசை போன்றவைகளால் இன்று வெற்றிப்படமாக உலா வருகிறது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

## ஏப்பிரல் - 22



## மாவீரன் லெனின்

## பிறந்த தினம்



படிப்பகம்

www.padippakam.com

# மனிதாபிமானத்தின் பேரால்

மனிதாபி மானத்தின் பேரால்
அவரைப் போகவிடுங்கள்.
போப்பாண்டவரின் பிரதிநிதியின்
உருக்கமான வேண்டுகோள்
மனிதாபிமானத்தின் பேர் வலியது.
அதன் குரலும் வலியது.
எனினும்
அவற்றின் வலிமை யார் மீதான
மனிதாபிமானம் என்பதிலேயே தங்கியுள்ளது.
அது
வத்திகானிலிருந்து *பினோஷேக்காக ஒலிக்கையில்,
அதற்காகக்
காத்துக்கிடக்கும் செவிப்பறைகளை இதமாக வருடி
அதிகாரத்தின் இரும்பு நெஞ்சை இளக்கவும் கூடும்.
இதே மனிதாபிமானத்தின் குரல்
ஒரு ஒரு கால் நூற்றாண்டுக் காலத்தின் முன்பே,
சிலேயின் படுகொலைக்கு
முன்பே பின்போகூட ஒலித்திருந்தால்
ஒருவேளை
மனிதாபிமானத்தின் பேரால்
இன்று
பினோஷேக்காக மன்றாட நேர்ந்திராது
ஒரு வேளை
பினோஷே யாரேன்பதையே சிலே மறந்திருக்கும்
கொல்லப்பட்டோருக்காக ஒலிக்கும் போதை விட
கொலைகாரனுக்காக ஒலிக்கும் போது
மனிதாபிமானத்தின் குரல்
நீண்ட தூரங்களை எட்டுகிறது.
உறைந்த இதயங்களை தொடுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

எனவேதான்
ஆண்டவரின் பிரதிநிதியின் பிரதிநிதியே
மனிதாபி மானத்தின் பேரால் மன்றாடுகிறேன்.
மனிதாபி மானத்தின் பேரால் இந்த கொலைகாரனுக்காக
மன்றாடாதீர்...

– *சிவசேகரம்,* கொழும்பு.

* பினோஷே – சிலி நாட்டின் முன்னாள் சர்வாதிகாரி






படிப்பகம்

www.padippakam.com

# வெறுமை . . .

பிடித்துவந்த மீன்கள்
கரையோரம்
காயும் நேரங்களில்
படபடத்து வரும் காகங்கள்.

பட்டதில் பருசாயிருந்தால்
பருந்தின் பார்வைக்கும்
தப்பிவிட முடியாது.
ஏகமாய்
கடற்கரையோரங்களில்
கடலைவிட்டு
படகைவிட்டு வெளியேவரும்
மீன்களை மொய்க்கும்
காகக் கூட்டங்கள்.



இப்படியில்லாத காலங்களில்
கானாமல் போகும்
காகத்துடன்
எனதூர் மீனவக்குடிகளும்

\- நிகழ்வன்

படங்கள் தொகுப்பு - தோழர் தலித் சுப்பையா, புதுச்சேரி.

படிப்பகம்

www.padippakam.com

தனிச்சுற்று இதழ் TASNA No/ 213 / 01 / 99



ஆயுதம் செய்வோம்
நல்ல காகிதம் செய்வோம்
என்று கவிதை வாசித்துக் கொண்டிருந்தோம்.
சனாதனிகள் அரங்கிற்குள் வந்து
பாரதி எங்கள் சாதி என்றார்கள்
முற்போக்கு இலக்கியத்தின்
முதல் காலடி நாங்கள் என்றோம்
அந்த மேடையில்
முதல்வனில் ஒரு பாடலும் பாடினோம்.
நாற்பதாண்டுகளாய் நாட்களை எண்ணினோம்
இரண்டாயிரத்தையும் இனிதே வரவேற்றோம்.
வெண்மணியில் தலித்துகள்
எரித்துக் கொல்லப்பட்டார்கள்
நாம் அவர்களுக்கு தியாகிப்
பட்டங்கள் வழங்கி கௌரவித்தோம்.
உஞ்சனையில் தலித்துகள்
வெட்டிக் கொல்லப்பட்டார்கள்.
நாம் சமாதானமாக வாழ்வது குறித்து
ஒரு கருத்தரங்கம் நிகழ்த்தினோம்.
கொடியங்குள வீடுகள்
சின்னாபின்னமான போது
அரிவாள் சுத்தியல் சின்னத்தினை
சிலாகித்தபடி இருந்தோம்.



சிதம்பரம் பத்மினி
அத்தியூர் விஜயா
பாலியல் வன்முறைக்குள்ளானார்கள்
நம் வழக்கறிஞர்கள்
சிறப்பாய் வாதாடி நட்ட ஈடும்
வாங்கித்தந்தார்கள்
தாமிரபரணிக்கரையில் தலித் பிணங்கள்
மிதந்த போது நாம்
சமத்துவ புரங்களின் கொல்லைப்புறக்
கதவுகளுக்கு தாழ்ப்பாள் கேட்டு
ஒரு பேரணியை நடத்தி முடித்தோம்.
புரட்சியைப் பற்றி நாம் முன்னர் பேசியதாக
ஆளுக்கு ஆள் சொல்லுகிறார்கள்
அவர்களுக்கு எதிராகவும் நாம்
ஒரு பேரணியை முன்னெடுப்போம்.

- மேகவண்ணன்.

படிப்பகம்